இதயப் பிரச்சினை என்பது எந்த நேரத்திலும் வரலாம் என்ற அடிப்படை அறிவு கூட எடப்பாடி பழனிச்சாமிக்கு இல்லை!

# அவதூறாகப் பேசிடும் எடப்பாடி மன்னிப்பு கேட்காவிட்டால் வழக்குத் தொடரப்படும்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி எச்சரிக்கை!

**சென்னை, ஜீன் 18-**

**“இதயப் பிரச்சினை என்பது எந்த நேரத்திலும் வரலாம் என்ற அடிப்படை அறிவு கூட எடப்பாடி பழனிச்சாமிக்கு இல்லை!அவதூறாகப் பேசிடும் எடப்பாடி மன்னிப்பு கேட்காவிட்டால் வழக்குத் தொடரப்படும்!” என பழனிச் சாமி பேச்சுக்குக் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**சென்னை - அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் அளித்த பேட்டியின்போது ஆர்.எஸ்.பாரதி குறிப்பிட்டதாவது:-**

நேற்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் டுவிட்டரில் ஒரு செய்தியினை வெளியிட்டு இருந்தார்கள்.

கட்சித் தொண்டர்களுக்கெல்லாம் விளக்கம் அளிக்கக்கூடிய வகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வரலாற்றையும், இந்த இயக்கம் எப்படிப்பட்ட சோதனைகளையெல்லாம் சந்தித்தது அவற்றையெல்லாம் எதிர்கொண்டு எப்படி வெற்றி கண்டோம் என்பதை, ஒரு தலைவன் என்ற முறையில், தொண்டர்களுக்குத் தெரிவிக்கவேண்டிய கருத்தை உரிய நேரத்திலே எங்கள் தலைவர் அறிக்கையாக வெளியிட்டார்.

அந்த அறிக்கையைப் படித்துவிட்டு, பதில் சொல்ல இயலாத எடப்பாடி அவர்கள், ஏதோ இவர்தான் அமலாக்கத் துறை விசாரணை அதிகாரிபோல, ஒரு பேட்டியில் இன்றைக்குக் குறிப்பிட்டு இருக்கிறார்.

அமலாக்கத் துறையின் ரெய்டைப் பற்றி பேசுவதற்கு இவருக்குத் தகுதியே கிடையாது. ஆனால், அவர் ஓர் அமலாக்கத் துறை அதிகாரியைப்போல, அறிக்கை கொடுத்திருக்கிறார்.

அன்றைக்கு செந்தில்பாலாஜியினுடைய வீட்டின் முன் என்ன நடந்தது என்பதை நீங்கள் எல்லாம் கண்கூடாகப் பார்த்திருப்பீர்கள்.

நள்ளிரவில் கைது செய்யப்பட்டு, அவர் துன்புறுத்தப்படுகிறார். குடிப்பதற்குத் தண்ணீர்கூட கொடுக்கப்பட முடியாத நிலை இருக்கிறது என்று எங்களுக்குத் தகவல் கிடைத்தவுடன், எங்கள் தலைவர் தளபதி அவர்கள், என்னிடத்தில் சொல்லி, உடனடியாக செந்தில்பாலாஜியினுடைய வீட்டிற்குச் சென்று, அவரை சந்தித்து, என்ன நடந்தது? என்பதை எங்களுக்குச் சொல்லவேண்டும். அதற்காக நீங்கள் நேரில் செல்லுங்கள் என்று அனுப்பி வைத்தார்.

அதன்படி, நானும், சட்டமன்ற உறுப்பினரும், வழக்குரைஞருமான பரந்தாமன் அவர்களும், அன்று மாலை 3 மணியளவில் சென்றோம். அவரை சந்திக்க வேண்டும் என்று நான் கேட்டேன்; பத்திரிகையாளர்கள்கூட அங்கே இருந்தார்கள். உள்ளே சென்றுகூட நான் அவரை சந்திக்க அனுமதிக்கவேண்டாம்; அவருடைய உடல்நிலை, மனநிலை எப்படி இருக்கிறது? என்று பார்ப்பதற்கு அவரைக் கொண்டு வந்து நிறுத்துங்கள் என்று கேட்டேன்.

10 நிமிடத்தில் பதில் சொல்வதாக சென்றுவிட்டுச் சென்றவர்கள், ஒரு மணி நேரமாகியும் வராத காரணத்தினால், உடனடியாக நான் செய்தியாளர்களைச் சந்தித்து, இந்தத் தகவலை சொன்னேன்.

### விசாரணை மனித நேயத்தோடு நடக்க வேண்டும்!

மனிதநேயத்தோடு நடைபெறவேண்டும். ஆனால், ஒரு மனிதரைக் கைது செய்து, ஏறத்தாழ 10, 15 மணிநேரம் யாரையும் பார்க்கவிடாமல், 18 மணிநேரம் துன்புறுத்தப்பட்டு, அதனால் செந்தில்பாலாஜி அவருக்கு இதயக் கோளாறு ஏற்பட்டு, நல்லவேளையாக மருத்துவமனைக்குச் சென்ற காரணத்தினால், அவருக்கு மூன்று அடைப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. கொஞ்சம் காலதாமதமாக ஆகியிருந்தால் என்ன ஆகியிருக்கும்?

இதற்கு எடப்பாடி என்ன சொன்னார், நாடகமாடுகிறார் என்று.

இதயநோய் எப்படி வரும் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று.

உதாரணத்திற்குச் சொல்கிறேன்

நான் சொல்லப் போகும் தகவல் எடப்பாடி பழனிசாமிக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. காரணம் அவர் நேற்று வந்தவர்.

1987 ஆம் ஆண்டு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் டிசம்பர் மாதம் 22 ஆம் தேதி, ஆலந்தூர் நகர மன்றத் தலைவராக நான் இருக்கிறேன் அப்பொழுது, என்னுடைய கட்டடத்திற்கு எதிரிலே தான் ஜவகர்லால் நேருவினுடைய சிலை திறப்பு நடைபெற்றது.

மாலை 7 மணிக்கு நடைபெற்ற அவ்விழாவில், நல்ல திடகாத்திரத்தோடு வந்து பங்கேற்றுச் சென்றவர்தான் அடுத்த இரண்டு நாளில் மாரடைப்பில் மறைந்தார் என்பது வரலாறு.

எடப்பாடி பழனிசாமி ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும் பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லடா, போக்கத்தவனே என்று திரைப்படத்தில் ஒரு வசனம் வரும். அதுபோல, ஒரு பொய்யை சொன்னாலும், அதைப் பொருத்தமாகச் சொல்லவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும், எங்கள் தலைவர்மீதும் கேவலமாகப் பேசுவதையெல்லாம் நிறுத்திக் கொள்ள வேண்டும்.



பதற்றத்தோடு பேசினாராம் முதலமைச்சர். என்ன பதற்றம் எங்களுக்கு?

நாங்கள் எல்லாம் அண்ணன், தம்பிகளாக கருதக்கூடியவர்களாக இருக்கின்ற கட்சி ஒரு தொண்டனுக்கு ஹார்ட் அட்டாக் ஏற்படுகிறது என்று சொன்னால், அவரைப் போய் பார்ப்பதில் என்ன தவறு இருக்கிறது?

### டெல்லி சென்று காலில் விழுந்தது யார்?

நாங்கள் மருத்துவமனைக்குச் சென்று செந்தில்பாலாஜியைப் பார்த்தோம். ஆனால், தங்கமணிக்கும், வேலுமணிக்கும் ரெய்டு வந்தபொழுது, எடப்பாடி பழனிசாமி என்ன செய்தார்?

இரவோடு இரவாக டில்லிக்குப் போய், அமித்ஷா காலில் விழுந்தாரா, இல்லையா?

நான் சொல்வது பொய்யாக இருந்தால், எடப்பாடி பழனிசாமி என்மீது வழக்குத் தொடுக்கட்டும்.

தங்கமணி, வேலுமணி வீடுகளில் ரெய்டு நடந்தபொழுது, எடப்பாடி பழனிசாமி டில்லிக்குச் சென்று, ஒவ்வொரு கதவாகத் தட்டி, காலில் விழுந்து, அதற்குப் பரிகாரமாக என்ன கொடுத்தார்?

தன்னுடைய கட்சிக்காரருக்குக் கொடுக்கவேண்டிய ஒரு மாநிலங்களவை பதவியை, மிரட்டி ஜி.கே.வாசனுக்கு வாங்கினார்களா, இல்லையா பா.ஜ.க.வினர்.

மூன்று எம்.பி.க்கள் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கக் கூடிய உறுப்பினர்கள் அ.தி.மு.க.விற்கு இருந்தும், பா.ஜ.க. மிரட்டியது என்பதற்காக, ஜி.கே.வாசனுக்குக் கொடுத்தீர்களா, இல்லையா?

இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி, என்னையும் சம்பந்தப்படுத்திப் பேசியிருக்கிறார். செந்தில்பாலாஜிமீது போட்ட வழக்கை நான் திரும்பப் பெற்றுக்கொண்டேன் என்று ஒரு வடிகட்டிய பொய்யைச் சொல்லியிருக்கிறார்.

எடப்பாடிக்கு வரலாறும் தெரியாது; சட்டமும் தெரியாது. வழக்குரைஞரிடம் கேட்டாவது சொல்லியிருக்கலாம்; யாரோ ஒருவர் எழுதிக் கொடுத்ததை, தெரியாமல் அவரும் படித்துவிட்டார்.

வரலாற்றை நான் சொல்ல விரும்புகிறேன் அவர்கள் தலைவி ஜெயலலிதா மீது, முதன்முதலில் டான்சி வழக்குப் போட்டது நான்தான், சைதாப்பேட்டை நீதிமன்றத்தில்.

அந்த வழக்கு நடைபெற்ற நேரத்திலேயே, அந்த அம்மையார் சென்னை உயர்நீதிமன்றத்திற்குச் சென்று தடை கோரினார்கள்; அந்த மனு தள்ளுபடியாகி, அது உச்சநீதிமன்றம்வரை சென்றது.

அதற்கிடையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், அதே டான்சி வழக்கிற்காக, சிறப்பு நீதிமன்றம் அந்த வழக்கை விசாரிப்பதற்கு அரசாங்கம் உத்தரவிட்டது.

இதைத்தான் எடப்பாடி பழனிசாமி தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

நான் போட்ட வழக்கும் அப்படியே இருக்கிறது; அரசாங்கத்தின் சார்பிலும் ஒரு வழக்குப் போடப்பட்டது.

உச்சநீதிமன்றத்தில் ஜெயலலிதா மனு தாக்கல் செய்தார்கள்; சென்னை உயர்நீதிமன்றத்தில் டான்சி வழக்கு எப்படியெல்லாம் நடந்தது என்று தெரியும். வழக்கின் முடிவில் ஜெயலலிதா அம்மையாருக்கு முதலில் 2 ஆண்டுகள் தண்டனை கிடைத்தது.

பதவிக்கு அந்த அம்மையாரால் வர முடியவில்லை. ஓ.பி.எஸ். முதலமைச்சராக இருந்தார். அந்த நேரத்தில், டான்சி வழக்கில் ஜெயலலிதா தண்டனை பெற்றிருந்த காரணத்தினால், அவசர அவசரமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் அந்த வழக்கு விசாரிக்கப்பட்டு, அந்தத் தண்டனை ரத்து செய்யப்பட்டது.

விதி என்னவென்று சொன்னால், கீழ் நீதிமன்றத்தில் தண்டனை பெற்று, உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து வெற்றி பெற்றால், அரசாங்கம் உச்சநீதிமன்றத்திற்கு மேல்முறையீட்டுக்குச் செல்லவேண்டும்.

ஆனால், அப்படி அந்த வழக்கில் அரசாங்கம் போகவில்லை. அதற்கு முன்னால், இந்த வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபொழுது, ஜெயலலிதா அவர்கள் உச்சநீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தார்; ஏற்கெனவே ஆர்.எஸ்.எஸ்.பாரதி என்மீது வழக்குத் தொடுத்திருக்கிறார்; அந்தத் தனி வழக்கு அப்படியே இருக்கிறது. இப்பொழுது அரசாங்கம் வழக்குத் தொடுத்திருக்கிறது. ஒரே குற்றத்திற்காக இரண்டு வழக்குப் போடக்கூடாது; இது எப்படி நியாயம்? என்று உச்சநீதிமன்றத்தில் மனு போட்டார்.

அந்த வழக்கு வந்தபொழுது, எனக்கு நோட்டீசு வந்தது. இன்றைக்கு அட்வகேட் ஜெனரலாக இருக்கக்கூடிய சண்முகசுந்தரம் அவர்கள்தான் அந்த வழக்கில் என் சார்பில் ஆஜரானார்.

### சட்டத்தை மதித்து வழக்கை வாபஸ் பெற்றேன்!

அந்த வழக்கின் விசாரணைபொழுது நாங்கள் என்ன சொன்னோம் என்றால், இந்த வழக்கை அரசாங்கம் நடத்துகிறது; நான் வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். வேண்டுமானால், எடப்பாடி பழனிசாமி அவருடைய வழக்குரைஞரை வைத்துப் பார்த்துக் கொள்ளலாம்.

நிபந்தனை விதித்து, நான் வழக்கைத் திரும்பப் பெற்றேன்.

இங்கே உயர்நீதிமன்றத்தில் ஜெயலலிதா அம்மையார் அந்த வழக்கிலிருந்து விடுவிக்கப் பட்டவுடன், நல்ல வேளையாக, அந்த ஒரு நிபந்தனையோடு வழக்கைத் திரும்பப் பெற்றபடியால்தான், ஜெயலலிதாமீது உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய முடிந்தது.

அப்படி நான் மேல்முறையீடு செய்ததினால்தான், அந்த அம்மையார் டான்சி நிலத்தை ஒப்படைக்கிறேன் என்று சரண்டர் ஆனார்.

இன்றைக்கு ஏறத்தாழ 1000 கோடி ரூபாய் பெறுமானமுள்ள அந்த டான்சி நிலம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், நான் போட்ட வழக்கினால் மீட்டெடுக்கப்பட்டது என்கிற வரலாறை எடப்பாடி பழனிசாமி தெரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோல்தான், எடப்பாடி பழனிசாமிமீது 4 ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் செய்தார். அந்த ஊழலை விசாரிப்பதற்கு நீதிமன்றம் தலையிடவேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வழக்குத் தாக்கல் செய்தேன்.

அந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, அந்த வழக்கை சி.பி.அய். விசாரிக்கவேண்டும் என்று உத்தரவுப் போட்டது. அப்பொழுது தமிழ்நாட்டின் முதலமைச்சராக எடப்பாடி பழனிசாமி இருந்தார்.

அவர் உச்சநீதிமன்றத்தில், இந்த வழக்கை சி.பி.அய். விசாரிக்கக் கூடாது; மாநில காவல்துறையே விசாரிக்க வேண்டும் என்று அந்த வழக்கில் தடை வாங்கினார்.

அப்பொழுது இவர் முதலமைச்சராக இருந்தார்; நாங்கள் கேட்டதெல்லாம், இவரே முதலமைச்சர்; இவரே காவல் துறை அமைச்சர் இந்நிலையில், இந்த வழக்கை மாநில காவல்துறையால் விசாரிக்கப்பட்டால், நீதி கிடைக்காது; நியாயம் கிடைக்காது; ஆகவே, சி.பி.அய். விசாரிக்கவேண்டும் என்று கூறியது உண்மை.

ஆனால், பிறகு சூழ்நிலை மாறி, இப்பொழுது வழக்கு விசாரணைக்கு வந்தது. உச்சநீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வருகிறபொழுது, அவர் கேட்டது, சி.பி.அய். விசாரணை வேண்டாம் என்று. எடப்பாடி பழனிசாமி போட்ட மனுவில்தான், சி.பி.அய். விசாரணை வேண்டாம் என்று சொன்னார்; மாநில காவல்துறையே விசாரிக்கவேண்டும் என்று சொன்னார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன், நான் என்ன சொன்னேன் என்றால், நான் அவருடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்கிறேன்; என்னுடைய வழக்கை திரும்பப் பெறுகிறேன். சி.பி.அய். விசாரிக்க வேண்டாம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மாநில காவல்துறையே விசாரிக்கட்டும் என்று சொன்னேன்.

### தி.மு.கழகம் பயம் என்பதை அறியாது!

பயம் என்கிற வார்த்தையே தி.மு.க.வின் வரலாற்றில் யாருக்கும் கிடையாது என்பதை எடப்பாடிக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள்மீது சொன்ன அத்துணை குற்றச்சாட்டுகளையும் நிரூபித்துக் காட்டியிருக்கிறது தி.மு.க. உங்கள் தலைவியிலிருந்து சாதாரண ஆட்கள்வரை நாங்கள் கொடுத்த புகாரில், எல்லோரும் சிறைத் தண்டனை பெற்றிருக்கிறார்கள்.

இப்பொழுது எடப்பாடி பழனிசாமியின் வழக்குத் தொடங்கப்பட்டு இருக்கிறது; வேலுமணிமீது வழக்கு ஆரம்பித்திருக்கிறது; தங்கமணிமீது வழக்கு ஆரம்பித்திருக்கிறது.

ஆகவே, இவையெல்லாம் மிக விரைவிலே உங்கள் தலைவிக்கு ஏற்பட்ட மாதிரிதான் உங்களுக்கும் ஏற்படப் போகிறது.

இவற்றையெல்லாம் மறைப்பதற்காக, முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோன்று இருக்கிறது அவர் சொல்வது.

செந்தில்பாலாஜி எந்த வழக்கில் கைது செய்யப்பட்டு இருக்கிறார். உங்கள் தலைவி ஜெயலலிதா முதலமைச்சராக இருக்கின்றபொழுது நடைபெற்ற நிகழ்விற்காக.

எங்களைத் தாக்குவதாக நினைத்துக் கொண்டு, உங்கள் தலைவி ஜெயலலிதாவை இழிவுபடுத்துகிறீர்கள். உங்கள் தலைவி முதலமைச்சராக இருக்கும்பொழுதுதானே இது நடந்தது. உங்கள் ஆட்சியில்தானே அது நடந்தது.

**செய்தியாளர்:** ஊழல் செய்ததற்காக செந்தில்பாலாஜியை அமைச்சர் பதவியிலிருந்து தூக்கிவிட்டார்களே?

**ஆர்.எஸ்.பாரதி:** சரி, பிறகு ஏன் 2016 ஆம் ஆண்டு ஏன் தேர்தலில் நிற்பதற்கு வாய்ப்புக் கொடுத்தார்கள்?

**செய்தியாளர்:** சரி, உங்கள் கட்சியில் நீங்களும் அவர் தேர்தலில் நிற்பதற்கு வாய்ப்பு கொடுத்தீர்களே?

**ஆர்.எஸ்.பாரதி:** நாங்கள் அவர் தேர்தலில் நிற்பதற்கு வாய்ப்புக் கொடுத்தோம். ஆனால், வழக்கை நாங்கள் திரும்பப் பெற்றோமா?

நடவடிக்கை என்பது வேறு.

அப்படிப் பார்த்தால், அமித்ஷாமீது கொலைக்குற்றமே இருந்தது; அவர் ஒன்றிய உள்துறை அமைச்சராக ஆகவில்லையா?

எடப்பாடி மீது வழக்கு இருந்தது; ஜெயலலிதாமீது வழக்கு இருந்தது; அவர்கள் எல்லாம் பதவிக்கு வந்தார்களே!

**செய்தியாளர்:** உங்களால் ஊழல் குற்றச்சாட்டு சொல்லப்பட்ட ஒருவருக்கு உங்கள் கட்சியில் வாய்ப்புக் கொடுத்திருக்கிறீர்களே?

**ஆர்.எஸ்.பாரதி:** அப்படிப் பார்த்தால், முன்னுதாரணத்தை நான் சொல்கிறேன், எங்கள் கட்சியில் நாவலர் நெடுஞ்செழியன் இருந்தபொழுது, வைர நெக்லஸ் ஊழல் என்று எழுதிக் கொடுத்த எம்.ஜி.ஆர்.தான், அதே நாவலர் நெடுஞ்செழியனுக்கு மந்திரி பதவியும் கொடுத்தார்; கட்சியின் பொதுச்செயலாளர் பதவியும் கொடுத்தார்.

ப.உ.ச. மூட்டைக்கு மூன்று ரூபாய் வாங்கினார் சர்க்காரியா கமிசனில் புகார் கொடுத்த அவர்களுடைய புரட்சித் தலைவர் என்று சொல்கிறார்களே, அந்தப் புரட்சித் தலைவரே பிற்காலத்தில் ப.உ.ச.விற்கு மந்திரிப் பதவி கொடுத்தார்; பொதுச்செயலாளர் பதவியும் கொடுத்தார்.

ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அவர் வந்து இரண்டரை ஆண்டுகள் ஆகிவிட்டன. கடுமையாக உழைத்தார்; அதற்குப் பிறகுதான் பதவி கொடுத்தோம்.

பழைய வழக்கு அவர்மேல். அந்த வழக்கிற்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை. காரணம், அந்த வழக்கு உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி சென்று கொண்டிருப்பதால்.

சமாதானமாகப் போவதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது. அப்படி சமாதானமாகப் போய், முடித்து வைக்கப்பட்டது சென்னை உயர்நீதிமன்றத்தில்.

எப்படி டான்சி வழக்கில் நடந்ததோ, அதுபோன்று இப்பொழுது போயிருக்கிறார்கள்.

**செய்தியாளர்:** செந்தில்பாலாஜிக்கு உடல்நிலை சரியில்லாததால், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் போய் பார்த்தார் என்று சொல்லுகிறீர்கள்; ஜெ.அன்பழகன் உடல்நிலைக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபொழுது ஏன் அவரைப் போய் பார்க்கவில்லை மு.க.ஸ்டாலின்?

**ஆர்.எஸ்.பாரதி:** அது கோவிட் தொற்று காலகட்டம். ஜெ.அன்பழகன் அவர்கள் மருத்துவமனையில் கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நேரத்தில், நாங்கள் எல்லாம் அங்கேயே இருந்தோம். தளபதியோடு நாங்களும் சென்றிருந்தோம். ஜெகத்ரட்சகன் அறையில் அமர்ந்திருந்தோம் அன்று இரவு முழுவதும் சாப்பிடாமல் அமர்ந்திருந்தார் தளபதி.

24 மணிநேரமும் மருத்துவமனையில் இருந்த தலைவர்தான் எங்கள் தலைவர்.

**செய்தியாளர்:** 2ஜி வழக்கில் ஆ.இராசாவும், கனிமொழியும் சிறையில் இருந்தபொழுது மு.க.ஸ்டாலின் ஏன் சென்று பார்க்கவில்லை?

**ஆர்.எஸ்.பாரதி:** இது பச்சைப் பொய். மக்கள் மறந்துவிடுவார்கள் என்று நினைக்கிறீர்கள்.

2011, ஜூன் மாதம் 27 ஆம் தேதி, தளபதி மு.க.ஸ்டாலினும், டி.ஆர்.பாலுவும், அப்பொழுது எம்.பி.யாக இருந்த ஏ.கே.எஸ்.விஜயனும், திகார் சிறைச்சாலைக்குச் சென்று கனிமொழியை சந்தித்தார்கள். சிறைப் பதிவேட்டில் பதிவாகியிருக்கிறது அதைப் பார்த்துக் கொள்ளலாம்.

இதையெல்லாம் பத்திரிகைக்காரர்கள் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

ஏனென்றால், காலையில் சாப்பிட்டதை மதியம் கேட்டால் மறந்துவிடுகிறார்கள் இந்தக் காலத்தில்.

ஆகவே, 2011 ஆம் ஆண்டு நடந்ததை, பத்திரிகையாளர்களாகிய நீங்களே மறந்துவிட்டீர்களே!

கனிமொழி, ஆ.இராசாவை சிறைச்சாலையில் சென்று மு.க.ஸ்டாலின் பார்க்கவில்லை என்று எடப்பாடி பழனிசாமி சொல்வது பச்சைப் பொய், வடிகட்டிய பொய்.

எடப்பாடி பழனிசாமிதான் தெரியாமல் பொய் சொல்கிறார் என்றால், அவருக்கெல்லாம் பதில் சொல்லச் சொல்கிறீர்களே!

அவர்கள் போன்று காலையில் காலில் விழுந்து அம்மா என்று சொல்வார்கள்; மதியம் தெய்வத்தாயே என்பார்கள்; மாலையில் பேயே என்பார்கள். இராத்திரியில் வேறு மாதிரி பேசுவார்கள்.

என்னைப் போய் அடிமை என்று சொல்கிறார் எடப்பாடி பழனிசாமி.

நான் மு.க.ஸ்டாலினுக்கு அடிமையாக இருப்பதை விரும்புகிறேன். 62 ஆண்டுகளாக கருப்பு சிவப்பு கொடியைப் பிடித்துக்கொண்டு ஒரே கட்சியில் இருக்கிறேன். அண்ணா அவர்கள் பொதுச்செயலாளராக இருக்கும் காலந்தொட்டு தொடர்ந்து இந்தக் கட்சியில் பணியாற்றி வருகிறவன் நான்.

எடப்பாடி என்னைப் பார்த்து அடிமை என்று சொல்கிறார். இவர் டேபிளின் அடியில் சென்று அல்லவா, முதலமைச்சர் ஆனார். முதலமைச்சர் பதவியில் அமர்ந்த அடுத்த நிமிடமே, சசிகலாவை நாயே, பேயே என்று திட்டுகிறார்களே! அது போன்ற கூட்டமல்ல நாங்கள்.

நேற்றுகூட டி.ஆர்.பாலு அவர்கள் அண்ணாமலைமீது போட்ட வழக்கு, 16 ஆம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சம்மன் அனுப்பப்பட்டு இருக்கிறது.

ஆக, பொய் சொன்னதற்காக, எடப்பாடி பழனிசாமிமீது வழக்குத் தொடுக்கப்படும்.

**செய்தியாளர்:** இலாகா இல்லாத அமைச்சராக செந்தில்பாலாஜி அறிவிக்கப்பட்டதை, ஆளுநர் ஏற்றுக்கொள்ளவில்லையே தமிழ்நாடு அரசுக்கு ஆளுநரின் ஒப்புதல் இல்லாமல் மாற்றுவதற்கு அதிகாரம் இருக்கிறதா?

**ஆர்.எஸ்.பாரதி:** இருக்கிறது.

நேற்றைய தினம் தளபதி அவர்கள் 15 மாதத்தில் மருத்துவமனையைத் திறக்கப் போகிறோம் என்று பெருமையாகச் சொன்னார்.

இப்படி ஒரு பெருமையை சொல்வதற்கு எடப்பாடி ஆட்சியில் ஏதாவது ஒன்று உண்டா?

அதையெல்லாம் மூடி மறைப்பதற்காக, மக்களுக்காக உழைக்கின்ற முதலமைச்சரின் பெயரை, களங்கப்படுத்த வேண்டும் என்கிற உள்நோக்கத்தோடு இப்படி பொய்யைச் சொல்கிறார். அதைத் தி.மு.க. சந்திக்கும்.

தி.மு.க. எந்தக் காலத்திலும், எதற்கும் அஞ்சியது கிடையாது. மிசாவையே நாங்கள் பார்த்தவர்கள். இது என்ன அமலாக்கத்துறை

உங்கள்மூலமாக நான் சவால் விட்டுக் கேட்கிறேன் 1972 ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆர். கட்சி தொடங்கியது முதல் இது வரை எங்கள்மீது பல பேர் குற்றம்சாட்டியிருக்கிறார்கள்.

எந்தக் குற்றச்சாட்டையாவது நிரூபிக்க முடிந்ததா?

எங்கள் தலைவர் கலைஞர் அவர்களை, இரவோடு இரவாக சித்திரவதை செய்து கைது செய்து கொண்டு போனார்கள். மேம்பால ஊழல் என்று சார்சீட் போட முடிந்ததா?

ஆக, தி.மு.க.வை பொறுத்தமட்டில், ஒரு தொண்டனைக் காப்பாற்றுவது கடமை.

**செய்தியாளர்:** செந்தில்பாலாஜியை அமலாக்கத் துறை கைது செய்ததினால், அவருடைய இலாகாவை மற்றவர்களுக்குக்..............

**ஆர்.எஸ்.பாரதி:** எப்படி அமித்ஷா கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்; உள்துறை அமைச்சராக அவரை நியமிக்கின்ற அதிகாரம் மோடிக்கு இருக்கிறதோ, அதே அதிகாரம்தான் எங்களுக்கும் இருக்கிறது.

அவரை நாங்கள் உள்துறை அமைச்சராக நியமிக்கவில்லை. இலாகா இல்லாத அமைச்சர் என்றுதான் போட்டிருக்கின்றோம். காரணம் என்னவென்றால், குற்றம் நிரூபிக்கப்பட்டால்தான் குற்றவாளி.

குற்றம் நிரூபிக்கப்பட்டு நான்காண்டு தண்டனை கொடுக்கப்பட்டவர் ஜெயலலிதா. அதனால் முதலமைச்சர் பதவியைத் துறந்தார்.

**செய்தியாளர்:** அமைச்சர் செந்தில்பாலாஜி கைது செய்யப்பட்டார் என்ற தகவலை ஆளுநருக்குத் தெரிவித்தீர்களா?

**ஆர்.எஸ.பாரதி:** தெரிவித்துதானே ஆக வேண்டும். தெரிவிக்காமல் இருக்க முடியாது.

159 ஏக்கர் நிலத்தில் உட்கார்ந்து கொண்டு, தமிழ்நாட்டு மக்களின் வரிப் பணத்தை சம்பளமாகப் பெற்றுக் கொண்டு, தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசுக்கு எதிர்ப்பாக ஆளுநர் செயல்படுகிறார் என்று சொன்னால், மிக விரைவில் அதற்குரிய பரிகாரம் தேடவேண்டும்.

ஆளுநர் இப்படி ஆட்சிக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறாரே, அவருக்கு எதற்கு 159 ஏக்கரில் இடம்? என்று காலையிலிருந்து தி.மு.க. தொண்டர்கள் கேட்கிறார்கள்.

ஆட்டுக்குத் தாடி எதற்கு? நாட்டுக்கு கவர்னர் எதற்கு? என்று கேட்ட கட்சிதான் தி.மு.க.

மிக விரைவில் எடப்பாடி பழனிசாமி மீது வழக்குத் தொடுக்கப்படும். அண்ணாமலைமீது எப்படி வழக்குத் தொடுத்தோமோ, அதேபோன்று நீதிமன்ற நோட்டீஸ் கொடுத்து அவர்மீது வழக்குத் தொடுக்கப்படும்.

இவ்வாறு தி.மு.க. அமைப்புச் செயலாளர் வழக்குரைஞர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களிடம் கூறினார்.